OS: 487/2018

Date: 12.01.2026

பெயர் : அலமேலு **(வா.சா.1) ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்**.

**<u>9ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

1. இந்த வழக்கின் 4ம் பிரதிவாதி கோவிந்தராஜ் எனது மாமனார் என்றால் ஆமாம். எனது மாமனாருக்கு எனது கணவரும், 1ம் பிரதிவாதியும் மட்டும்தான் ஆண் வாரிசுகள் என்றால் ஆமாம். 30.03.2007ல் 4ம் பிரதிவாதியான என் மாமனார் அவரது ஆண்வாரிசான 1ம் பிரதிவாதிக்கும், எனது கணவருக்கும் செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் ஆமாம். அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் யார் யாருக்கு என்ன பாகம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. அதனால் தான் என் கணவருடைய பாகத்தை பிரித்து கொடுக்குச்சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் ஆமாம். எனது கணவரும், 1ம் பிரதிவாதியும் தனித்தனியாக வீடுகட்டி அனுபவித்து வந்தார்கள் என்றால் ஆமாம். என் கணவர் 20.07.2012ம் ஆண்டு நடந்த மோட்டார் வாகன விபத்தில் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். எனக்கு குழந்தைகள் இல்லை என்றால் சரிதான்.

3. என் மாமியார் 2007ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் ஆமாம். தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதால் 3ம் பிரதிவாதிக்கு 4/16 பங்கு உள்ளது என்றால் ஆமாம். 3ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்றாலும், அவரது வாரிசுகள் தான் தற்போது தரப்பினர்களாக இருக்கிறார்கள் என்றால் ஆமாம். வழக்கு சொத்தை மைனருடைய நலனுக்கு விரோதம் இல்லாமல் பிரித்து கொடுக்கச்சொல்லி மைனர் தரப்பாக மைனர் கேட்டுக்கொள்கிறார் என்றால் ஒப்புக்கொள்கிறேன்.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

(ஒப்பம்/–த.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.